**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் – அரசு/அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு மத்திய அரசின் நிதியிலிருந்தும் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு மாநில அரசின் நிதியிலிருந்தும் வழங்கப்படும் பொருட்களுக்கான உணவூட்டுச் செலவினத்தை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (ப) எண்.334

நாள் 17.12.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, மார்கழி 2

படிக்க:–

1. மத்திய அரசு கல்வி அமைச்சகம் – பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை (பி.எம். போஷான்) கடிதம் எப் எண் 1–3 / 2021 / டெஸ்க் (ம.உ.தி) பகுதி 2, நாள் 21.04.2025.
2. அரசாணை (ப) எண் 144, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 29.05.2025.
3. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். 945906/சஉதி–2/ 2025, நாள் 04.06.2025 மற்றும் 22.09.2025.

------

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு உணவூட்டுச் செலவினம் ரூ.6.19/– ஆகவும், உயர்தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு ரூ.9.29/– ஆகவும் உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒன்றிய அரசால் 01.05.2025 முதல் தொடக்கப்பள்ளிகளில் (1 முதல் 5–ம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு உணவூட்டுச் செலவினத்தை ரூ.6.19/– லிருந்து ரூ.6.78/– (கூடுதல் ரூ.0.59 பைசா) ஆகவும், உயர்தொடக்கப்பள்ளிகளில் (6 முதல்

த.பி.பா.

8–ம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு உணவூட்டுச் செலவினத்தை ரூ.9.29/– லிருந்து ரூ.10.17/– (கூடுதல் ரூ.0.88/– பைசா) ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாய்)

| நிலை | மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உணவூட்டு மானியம் (நாளொன்றுக்கு ஒரு பயனாளி வீதம்) | | உயர்த்தப் பட்டுள்ள மானியம் | ஒன்றிய அரசு பங்கு (60) | மாநில அரசு பங்கு (40) |
|---|---|---|---|---|---|
| | 01.12.2024 முதல் | 01.05.2025 முதல் | | | |
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு) | 6.19 | 6.78 | 0.59 | 0.35 | 0.24 |
| உயர்தொடக்கப் பள்ளி (6 முதல் 8ம் வகுப்பு) | 9.29 | 10.17 | 0.88 | 0.52 | 0.35 |

3. மேலும், ஒன்றிய அரசால் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ள மானிய தொகையில், சத்துணவுத் திட்டத்திற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் பொருள்களுக்கு ஆகும் செலவினம் நீங்கலாக மீதமுள்ள தொகை ரூ.1521.04 இலட்சம் எனவும், மேற்காண் மீதமுள்ள தொகையினை கணக்கில் கொண்டு 3 கிராம் எண்ணெயின் அளவினை பயனாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு 4 கிராமாக உயர்த்த பரிந்துரைக்கப்படுகிறது என்றும், அவ்வாறு சத்துணவில் பயன்படுத்தப்படும் எண்ணெயின் அளவினை 4 கிராமாக உயர்த்துவதால் ரூ.1203.36 இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் எண்ணெய்க்கான கூடுதல் செலவினம் போக ஏற்படும் சேமிப்பு தொகையான ரூ.317.68 இலட்சம் கூடுதல் ஊட்டச்சத்திற்கான (முட்டை) செலவினமாக உயர் தொடக்கப்பள்ளி கணக்குத் தலைப்பில் செலுத்திட அனுமதி வழங்குமாறும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனடிப்படையில், கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது:–

I. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ஒன்றிய அரசால் உயர்த்தப்பட்டுள்ள உணவூட்டு செலவினத்தின் அடிப்படையில் 01.05.2025 முதல் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு

உணவூட்டு செலவினத்தை ரூ.6.19/- லிருந்து ரூ.6.78/- ஆகவும், உயர்தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு உணவூட்டு செலவினத்தை ரூ.9.29/-லிருந்து ரூ.10.17/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

II. ஒன்றிய அரசால் தொடக்கப்பள்ளி / உயர்தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ள உணவூட்டு செலவினத்தில் அரிசி நீங்கலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் உயர்த்தியபடி (ஒன்றிய அரசு: மாநில அரசு) - 60:40 விகிதத்தில் மேற்கொள்ளப்படும் உணவூட்டு செலவினம் கீழ்க்கண்டவாறு செலவிடப்படுகிறது.

**(அ). தொடக்கப்பள்ளி பயனாளிகள் (1 முதல் 5 ம் வகுப்பு வரை)**

| வ. எண் | உணவுப்பொருட்கள் | தற்பொழுது உள்ள விலை விகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்படும் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | பருப்பு (15 கி)<br>எண்ணெய் (3 கி)<br>கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப்பயிறு (20 கி)<br>(தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ. 1.65/-<br>(ரூ.0.98 + ரூ.0.32 + ரூ.0.35) | ரூ. 2.16/-<br>(ரூ.1.20 + ரூ.0.40 + ரூ.0.56) |
| 2 | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள்,<br>காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) | ரூ. 2.01/-<br>(ரூ.0.45 + ரூ.1.48 + ரூ.0.08) | ரூ. 2.01/-<br>(ரூ.0.45 + ரூ.1.48 + ரூ.0.08) |
| 3 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.25/- | ரூ.1.25/- |
| 4 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | ரூ.1.28/- | ரூ.1.36/- |
| | மொத்தம் | ரூ. 6.19/- | ரூ. 6.78/- |

<u>(ஆ). உயர் தொடக்கப்பள்ளி பயனாளிகள் (6 முதல் 8ம் வகுப்பு வரை)</u>

| வ. எண் | உணவுப்பொருள் | தற்பொழுது உள்ள விலைவிகிதம் | உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட உத்தேசிக்கப்படும் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | பருப்பு (15 கி) எண்ணெய் (3 கி) கருப்பு கொண்டைக்கடலை/ பச்சைப்பயிறு (20 கி) (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்) | ரூ. 1.65/- (ரூ.0.98 + ரூ.0.32 + ரூ.0.35) | ரூ. 2.16/- (ரூ.1.20 + ரூ.0.40 + ரூ.0.56) |
| 2 | உப்பு மற்றும் தாளிதப் பொருட்கள், காய்கறிகள் (உருளைக்கிழங்கு உட்பட) | ரூ.2.71/- (ரூ.0.45 + ரூ.2.18 + ரூ.0.08) | ரூ.2.71/- (ரூ.0.45 + ரூ.2.18 + ரூ.0.08) |
| 3 | எரிபொருள் (சத்துணவு மையங்களுக்கு) | ரூ.1.25/- | ரூ.1.25/- |
| 4 | கூடுதல் ஊட்டச்சத்து (முட்டை) | ரூ.3.68/- | ரூ.4.05/- |
| | மொத்தம் | ரூ. 9.29/- | ரூ. 10.17/- |

III. ஒன்றிய அரசால் உயர் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ள உணவூட்டு செலவினத்தின் அடிப்படையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் மாநில அரசால் உயர்நிலைப்பள்ளிகளில் (9-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு) பயிலும் மாணவ/மாணவியருக்கு உணவூட்டு செலவினத்தை ரூ.9.29/- லிருந்து ரூ.10.17/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

5. மேலும், பத்தி 4(II)-ல் ஒன்றிய அரசால் கூடுதல் ஊட்டச்சத்துக்காக (முட்டை) வழங்கப்பட்டுள்ள தொகையினை கீழ்காணும் மாநில அரசுக் கணக்கில் செலுத்துமாறு சமூக நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

"2236 - சத்துணவு - 02 - சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் - 102 - மதிய உணவு மாநிலச் செலவினங்கள் - LA - 10 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் - 377 - கழிக்கவும் திருப்பி வசூலிப்பவை - 05 - ஒற்றை ஒருங்கிணைப்பு முகமையிலிருந்து செயல்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான செலவினங்களை மீட்டெடுத்தல்."

IFHRMS (த.தொ.கு: 2236 02 102 LA 37705)

6. இவ்வாணை, நிதித்துறையின் மின் அலுவலக எண்.10719222/ நிதி(சந)/2025, நாள் 08.12.2025–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்(சந) துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ.எ. ஜெர்லின் ரஞ்சனி
17.12.2025

பிரிவு அலுவலர்

ஜெ
17/12/25